நகல் :-

சுருக்கம்

பழங்குடியினர் நலம் – 2013–2014–ம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – நீலகிரி மாவட்டத்தில் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினருக்கான வீடுகள் சீரமைத்தல் பணிகளுக்கு 100 பயனாளிகளுக்கு ரூ.2,50,00,000/- (ரூபாய் இரண்டு கோடி ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே1(2)துறை

அரசாணை (வா) எண்.176 நாள் 23.07.2013

விஜய ஆடி 7 திருவள்ளுவராண்டு 2044

படிக்கப்பட்டது:

பழங்குடியினர் நல இயக்குனரின் கடித எண். பமே/அ1/1201/2013
நாள் 06.06.2013 மற்றும் 01.07.2013.

------

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், பழங்குடியினர் நல இயக்குநர் 2013–2014–ம் ஆண்டிற்கான பகுதி –II திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர்களுக்கான வீடுகளைச் சீரமைக்க ரூ.250.00 இலட்சம் (ரூபாய் இருநூற்று ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

2. மேலே பத்தி 1–ல் உள்ள பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, 2013-14-ம் ஆண்டிற்கான பகுதி – II திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர்களுக்கான வீடுகளை அலகு ஒன்றுக்கு ரூ.2.50 இலட்சம் வீதம் 100 பயனாளிகளின் வீடுகளை சீரமைக்க ரூ.2,50,00,000/– (ரூபாய் இரண்டு கோடி ஐம்பது இலட்சம் மட்டும்) கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(i) பகுதி II திட்டத்திற்கு என ஒப்பளித்த தொகையினை மேற்கண்ட திட்டப் பணிக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும்

(ii) இத்திட்டத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட தொகையில் செலவினம் போக மீதம் இருப்பின் அத்தொகையினை அரசின் கணக்கில் ஒப்படைப்பு செய்ய வேண்டும்.

(iii) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 –ஐ பின்பற்றி இத்திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும்.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 796 – பழங்குடியினர் பகுதித் துணைத்திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II – மாநில திட்டம் – JK – அழிந்து வரும் நிலையிலுள்ள பழங்குடியினர் மேம்பாடு – 09 – உதவித்தொகை – 02 – மூலத்தனச் சொத்து உருவாக்குவதற்கான உதவித்தொகை (த.தொ.கு 2225–02–796–JK–0929)"

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை அவர்கள் பெற்று நீலகிரி மாவட்ட ஆட்சியருக்கு வழங்க அனுமதியளிக்கப்படுகிறது. நடைமுறையில் உள்ள விதிகளைப் பின்பற்றி நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக இத்திட்டத்தைச் செயல்படுத்த நீலகிரி மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இவ்வாணை வெளியிடப்பட்ட மூன்று மாதங்களுக்குள் பயனீட்டுச் சான்றிதழ் விவரங்களையும், செலவினம் போக மீதித்தொகை இருப்பின் அத்தொகையை அரசு கணக்கில் உடனடியாக ஒப்படைப்பு செய்து அதன் விவரத்தையும் தெரிவிக்குமாறும் நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.38459/ஆதி(ம)பந/13, நாள் 19.07.2013 –ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி//

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,பழங்குடியினர் நலத்துறை, சென்னை –5.
மாவட்ட ஆட்சியர், நீலகிரி மாவட்டம்.
மாநில கணக்காய்வுத் தலைவர்,சென்னை – 6/18/35.
கருவூல அலுவலர், நீலகிரி மாவட்டம்
நகல்:-
நிதி (ஆதி(ம) ப.ந.) துறை/ திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந8)துறை, சென்னை – 9.
அரசு செயலரின் தனி செயலர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12.2.2014.
பிரிவு அலுவலர்.